<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W 122/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | இந்திராணி | நாள் | 03.06.2025 |
| கணவர் பெயர் | கோவிந்தராஜ் | | |

இன்று 03.06.2025 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது,

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் மாமனார் சண்முகம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்திலிருந்த மரங்கள் அனைத்தையும் வெட்டி, நான் விற்றுவிட்டதால்தான் என் மாமனார் உயில் எழுதி வைத்தார் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் எதையும் வெட்டி விற்கவில்லை. மேற்படி உயில் கடந்த 01.09.2008 ல் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால், எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் ராஜகோபால் மற்றும் தன்ராஜ் ஆகிய இருவர் சாட்சி கையொப்பம் செய்திருந்தார்கள் என்றால், சரிதான். அந்த உயிலை திரு.கார்த்திகேயன் என்ற வழக்கறிஞர் தான் தயார் செய்து, பதிவு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கில் மேற்கண்ட வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன் என்பவரை சாட்சியாக வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட வழக்கறிஞர் தனது சாட்சியத்தில் உயிலில் எழுதப்பட்ட சங்கதிகள் அனைத்தும் சண்முகம் சொல்லிதான் எழுதப்பட்டது என்று தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் மாமனார் சன்முகம் சொல்லி, அந்த உயில் தயார் செய்யப்படவில்லை. அ.வ.எண்.122/2015 ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் குறித்துதான் மேற்படி உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த தன்ராஜ் என்பவர் மட்டும் சண்முகம் அவர்களின் உறவினர், மற்றொரு நபரான ராஜகோபால் யார் என்று எனக்கு தெரியவில்லை. ராஜகோபால் என்பவர் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியவில்லை. உயிலில் சாட்சி கையொப்பம் செய்த மற்றொரு நபரான ராஜகோபால் என்பவர் இறந்துவிட்டார் என்றும், இது குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றும், அதை மறைத்து வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தன்ராஜ் என்வருக்கு விபத்து ஏற்பட்டு, கால்களிலும், கைகளிலும் பலத்த காயம் ஏற்பட்டு படுத்தப்படுக்கையாக உள்ளார் என்றும், அது எனக்கு நேரடியாக தெரியும் என்றும் அதை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தன்ராஜ் என்பவர் 3ம் வாதியான பெருமாயி என்பவரின் கணவர் என்றால், சரிதான். சண்முகம் என்பவர் 01.09.2008ல் எழுதிய உயில் தான் கடைசி உயில் என்பதால், அது தான் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் அவர் சுய நினைவில் இல்லை. என் மாமனார் சண்முகம் 12.09.2008ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் சண்முகம் இறந்தபிறகு அவர் எழுதி வைத்த 01.09.2008 தேதியிட்ட உயிலானது ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது என்றும், அதன் அடிப்படையில் அந்த உயிலில் கட்டுப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் 2 முதல் 5 வாதிகளுக்கு பூர்ணமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன் அவர்கள் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார் என்றும், அதை நாங்கள் எவ்விடத்திலும் மறுத்தலிக்கவில்லை என்றால் சரியல்ல அதற்கு நாங்கள் மறுப்பு தெரிவித்துள்ளோம். 2ம் வாதியான பெரியகவுண்டருக்கு மனநிலை சரியில்லாதவர் என்றால் சரிதான். அதனால் தான் அவருக்காகவும் சேர்த்து 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2ம் வாதியான பெரியகவுண்டர் 2016ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால், சரிதான். அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 2ம் வாதியான பெரியகவுண்டர் திருமணம் செய்து கொள்ளாததால் அவரது வாரிசு என்ற அடிப்படையில் 1ம் வாதிக்கு தாவா சொத்துக்களில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 2ம் வாதியான பெரியகவுண்டர் இறந்துவிட்டதால் 1ம் வாதி மற்றும் 3 முதல் 5 வாதிகள் தாவா சொத்தை பூரணமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் மாமனாரான சண்முகம் எங்களுக்கென்று 1 ஏக்கர் நிலத்தை பிரித்து கொடுத்துள்ளார். அதன் சர்வே எண் என்னவென்றால், ச.எண்.356/7A ஆகும். ச.எண்.356/7A ல் மொத்தம் மூன்று நிலங்கள் வாதிகள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மூன்று நிலங்களும் 0.76–1/2 சென்ட், 0.11 சென்ட், 0.57 சென்ட் என்று பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று நிலங்களிலும் 1 ஏக்கர் என்று மொத்தமாக எங்கும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லப்பட்டுள்ள

சக்குபந்தியில் 1 ஏக்கர் நிலம் வரவில்லை என்றும், என் மாமனார் எங்களுக்கென்று எந்த சமயத்திலும் 1 ஏக்கர் நிலம் பிரித்து தரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 சுவாதீன போக்கிய பத்திரத்தில் 1 ஏக்கர் நிலம் எங்களுக்கு கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள 1 ஏக்கர் நிலமானது கற்பனையாக எங்களால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. உயிலில் கண்ட சொத்துக்களுக்கு வாதிகள் தான் தற்போது வரை வரி வகையறாக்கள் செலுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் உயில் ஆவணமும், சண்முகத்தின் இறப்பு சான்றிதழும், கந்தாய ரசீதும் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் செலுத்திய வாரி ரசீதுகளும் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளோம். எனக்கும், என் கணவருக்கும் சண்முகம் என்பவர் பணமாக நிறைய முறை உதவி செய்துள்ளார் என்றும், அதனால்தான் உயிலில் கண்ட சொத்துக்களில் எங்களுக்கு பாகமாக எதுவும் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல, என் கணவர் தான் சண்முகத்திற்கு நிறைய உதவிகள் செய்துள்ளார். அந்த சங்கதிகள் அ னைத்தும் உயிலில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அந்த உயில் செல்லாத உயில் ஆகும். என் கணவர் இறந்த பிறகு என் நடத்தை சரியில்லாத காரணத்தினாலும், எங்களுக்கு நிறைய பண உதவிகள் செய்ததாலும் தான் சண்முகம் அவர் எழுதிய உயிலில் கண்ட சொத்துக்கள் குறித்து எங்களுக்கு பாகம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. உயிலில் எழுதிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரிந்திருந்தும், தாவா சொத்துக்களில் ஆதாயம் தேடுவதற்காகவும், அதை வாதிகளிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காகவும் அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சட்டத்தை மதிக்காமலும், உயில் படி நடக்காததாலும் தான் வாதிகள் அ.வ.எண்.27/2015 ஐ தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.27/2015 வழக்கு செலவுத் தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றும், நான் தாக்கல் செய்த அ.வ.எண்.122/2015 வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் நான் சொல்லிய விவரங்களின் அடிப்படையில் என் வழக்கறிஞர் தயார் செய்தார்.

இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையும் நான் சொல்லிய விவரங்களின் அடிப்படையில் என் வழக்கறிஞர் தயார் செய்தார். என் கணவர் கோவிந்தராஜ் இறப்பிற்கு பிறகு நான் பாலகிருஷ்ணன் என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் எனக்கு நிதிஸ்ரீ என்ற பெண் குழந்தை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு கந்தாய ரசீது நாங்கள் எதுவும் செலுத்தாதால் தான், கந்தாய ரசீது ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நாங்களும் செலுத்தியுள்ளோம். நாங்கள் கந்தாய ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்துள்ளோம். நான் கந்தாய ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், சொத்து வரி மற்றும் வீட்டு வரி ரசீது மட்டும் தான் தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதற்கும் தாவா வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பெரியகவுண்டர் மற்றும் பெருமாள் ஆகியோரிடம் என் கணவர் கோவிந்தராஜீம், என் மாமனார் சண்முகமும் அடமானம் வைத்துள்ளார்கள். என் கணவர் கோவிந்தராஜ் மற்றும் என் மாமனார் சண்முகம் இருவரும் சேர்ந்து அடமானம் வைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அடமானம் வைத்த பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தார்களா என்றால் பதிவு செய்திருப்பார்கள், எனக்கு தெரியவில்லை. அவ்வாறு பத்திரம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமனார் சண்முகம் என் கணவருக்கு 1 ஏக்கர் நிலம் கொடுத்தாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு எந்த ஒரு சங்கதியும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அந்த 1 ஏக்கர் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எங்களுக்கு எந்த நிலமும் கொடுக்காததால் தான் நாங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து எங்கள் ஊரில் வாதிகள் தரப்பில் பஞ்சாயத்து கூட்டப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் சண்முகத்திற்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதால், அவருக்கு அது குறித்து எங்கு வேண்டுமானாலும் உயில் எழுதி, பதிவு செய்யும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. இந்த இடத்தில்

தான் உயில் எழுதவேண்டும் என்று அவரை கட்டாயப்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.